1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதியின் அளவைப் பொறுத்தும், அங்கே இருக்கக்கூடிய இடவசதியைப் பொறுத்தும், எவ்வளவு மாணவர்கள் சேர்க்கப்பட முடியும் என்பதைப் பொறுத்தும், இந்தக் கருத்தை குறித்து நாம் இறுதி முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபற்றி விவரக் குறிப்புகள் அனுப்புவார்களானால் துறையினால் ஆராய்ந்து ஆவன செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் எண் 836, 837 மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

தமிழக சிறைக்காவலர் சங்கத்தின் கோரிக்கைகள்.

வினா எண் 838 :- திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக சிறைக்காவலர்கள் சங்கம், காவலர்களுடைய குறைகளை உள்ளடக்கிய மகஜர் ஏதேனும் அரசுக்கு சமீபத்தில் சமர்ப்பித்தது உண்டா ?

(ஆ) ஆம் என்றால் அந்த கோரிக்கைகள் யாவை ?

(இ) அந்த கோரிக்கைகள் சம்பந்தமாக அரசு சங்க பிரதிநிதிகளுக்கு கொடுத்த வாக்குறுதி என்ன ?

(ஈ) அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) மொத்தம் 33 கோரிக்கைகளில் உடனடியாக செயல்படுத்துவதற்கு சாத்ய கூறு உள்ள கோரிக்கைகள் பின்வருமாறு :—

1. அவர்களுடைய சங்கத்தை அங்கீகரிப்பது.

2. பிற தென் மாநிலங்களில் இருப்பது போன்று, சாப்பாட்டு நேரங்களில் வேலை செய்யும் காவலர்களுக்கு ஒரு வேளை சாப்பாடு அளிக்க வேண்டும்.

3. எல்லா காவலர்களின் பணியை ஒழுங்குபடுத்த வேண்டும்.

4. பூட்ஸ்க்கு (Boots) பதிலாக ஷூஸ் (Shoes) கொடுக்க வேண்டும்.

5. பெண் காவலர்களுக்கு சரியான அளவில் சீருடை வழங்க வேண்டும்.

6. இத்துறையில் விளையாட்டுப் போட்டியை நடத்த வேண்டும்.

(இ) கோரிக்கைகள் தகுதி அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

(ஈ) இக் கோரிக்கைகளில் மூன்று நிறைவேற்றப்பட்டு உள்ளன. மற்றவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோரிக்கைகளில் ஏற்கனவே மூன்று அமல் நடத்தியாகி விட்டது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மூன்று கோரிக்கைகள் எப்போது அமல் நடத்தப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஜி.ஓ.-க்கள் எப்போது அனுப்பப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களின் பணியை ஒழுங்கு படுத்த வேண்டும் என்பதற்கும், பெண் காவலர்களுக்கு சரியான அளவில் சீருடை வழங்க வேண்டும் என்பதற்கும், விளையாட்டு போட்டி நடத்தப்பட வேண்டும் என்பதற்கும், இந்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்பதற்கும் ஐ.ஜி. அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. மற்ற கோரிக்கைகள் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமல் நடத்தப்பட்டிருக்கக்கூடிய கோரிக்கைகள் கடைசிப் பகுதி தான் அமல் நடத்தப்பட்டிருப்பதாக தெரிகிறது. மற்ற முக்கியமான பகுதி, சங்கத்திற்கு அங்கீகாரம் ; பிறகு டியூட்டி நேரத்தில் சாப்பாடு வழங்க வேண்டும் ; 'பெர்மனன்சி' போன்ற மூன்று மிக முக்கியமான கோரிக்கைகள் அமல் நடத்தப்படவில்லை என்று தெரிகிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் இந்த சாப்பாடு அவர்களுக்கு கொடுப்பது என்பது 'ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன்' ஏற்கனவே சிபார்சு செய்திருக்கிறபோது ; அதேமாதிரி கனம் அமைச்சர் அவர்கள் அன்று அவர்கள் கிளர்ச்சி நடத்திய போது வெளியிட்டிருக்கிற 'பிரஸ்நோட்டிலே' 1979 ஆம் ஆண்டிலே சங்கத்திற்கு அங்கீகாரம் கேட்டதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு வருடங்கள் ஆகியும், போலீஸ் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட பிறகும், இதிலே ஏன் காலதாமதம் ஏற்படுகிறது. எப்போது அங்கீகார உத்தரவு போடப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியாற்றுகின்ற காவலர்களுக்கு பணி நேரத்திலே ஒரு வேளை உணவு அளிக்கப்பட வேண்டும்

1981 ஏப்ரல் 22]

என்பதை அரசு ஏற்றுக்கொண்டு உத்தரவு இட்டிருக்கிறது. ஆனால் எத்தகைய உணவு வகைகள் வழங்க வேண்டுமென்ற ஒரு முடிவு செய்து அதற்கு குறிப்பினை ஐ. ஜி. அவர்களிடம் கேட்டு அதுவும் வந்திருக்கிறது. விரைவிலே உத்தரவு இடப் படும்.

சங்கம் அங்கீகரிப்பதை பொறுத்தவரை சில பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. காரணம் சங்கத்தைப் பொறுத்த வரை இரண்டு சங்கங்கள் தனித்தனியாக அங்கே செயல்பட்டு, இரண்டு சங்கங்களும் தங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று கோரிக்கையனுப்பி இருக்கிறார்கள். குறிப்பிட்ட சங்கத்தை பொறுத்தவரையில் அவர்கள் இத்தனை காவலர்கள் தங்கள் சங்கத்தில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்ற விவ ரத்தை தந்திருக்கிறார்கள். ஆனால் ஒட்டுமொத்தமாக சிறைத் துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்களை விட கிட்டத் தட்ட 100 அல்லது 120 காவலர்கள் எண்ணிக்கையில் அதிகமாக, பெயர்களை தந்து விட்ட காரணத்தினால், இது தவறான அடிப் படையில் இருக்கிறது என்று சரியான தகவலுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சிறையிலே பணியாற்றுகின்ற காவலர்கள் எம். எம். இஸ்மாயில் கமிஷன் விசாரணைக்கு உட்பட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டிருந்தார்கள். சமீபத்தில் வித்யா சாகர் மட்டும் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவ ரோடு சேர்ந்த மற்ற 4, 5 பேர்கள் வேலைக்கு அமர்த்தப்பட வில்லை என்பது எனக்கு கிடைத்த தகவல், அவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்களா? இல்லையெனில் அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர்களுக்கும் விசாரணை முடிந்து விட்டது எனவும், விசாரணை அதிகாரி அவர்களை வேலையில் மீண்டும் சேர்த்துக்கொள்வதை கூட, விசாரணைக்கு எந்தவித மான பங்கம் ஏற்படாது எனவும் பரிந்துரை செய்திருக்கிறார். அரசுக்கு தற்போது தான் அந்த தகவல் வந்திருக்கிறது. அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சேலம் மத்திய சிறையில் பணியில் சேரும்பொழுது ஒப்படைத்த கல்விச் சான்றிதழ்கள் குறித்து வந்த புகார் அடிப் படையில் 19 நபர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து அரசுக்கு அப்பீல் செய்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியில்லாத காரணத்தால் அல்ல, போலி சர்டிபிகேட்டுகளைக் கொடுத்ததின் காரணமாக அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே இரண்டு சங்கங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று கூறினார்கள். மொத்தம் இருக்கக்கூடிய காவலர்களின் எண்ணிக்கை எவ்வளவு ; அதில் 2 சங்கங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் யார் ? அரசியல் உள்நோக்கோடு சுங்கங்களை அமைத்திருக்கிறார் களா ? வேலூர் சிறையில் சங்கத்தை ஏற்படுத்துவதற்கு சூழ் நிலை உருவாகியபோது அந்தக் காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வேலை நீக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பது உண் மையா ? அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இரண்டு சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் கிட்டத்தட்ட எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் பிடித்துக்கொண்டு எங்களை ஆதரிக்க வேண் டும், ஆதரிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அரசியல் உள்நோக்கம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் தான் சொல்ல வேண்டும். தற்போது பிரச்சினையில் உள்ள சங்கத்திற்கு முன்பே ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திரு. கிருஷ்ணன் தலைமையில் ஒரு சங்கமும், திரு. இஸ்மாயில் தலைமையில் ஒரு சங்கமும் அமைக்கப்பட்டு அங்கீகரிக்க வேண்டு மென்று கோரிக்கை விடுத்து இருக்கிறார்கள். இரண்டு சங்கங் களும் பல்வேறு அரசியல் கட்சிகளை அணுகி அவர்கள் மூலமாக சங்கத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவுதல்

வினா எண். 839—திரு. வேடந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியம் திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் மாவட்ட நீதி மன்றத்தின் பிரிவு ஒன்றை நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.